21 MAY 2010
செயலகம், சென்னை

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் பயிலும் மாணவ/ மாணவியரிடமிருந்து 2008–09–ஆம் கல்வி ஆண்டு முதல் சிறப்புக் கட்டணம் (Special fees) இரத்து செய்ததினால் பள்ளிகளுக்கு ஏற்படும் நிதி இழப்பினை ஈடுசெய்தல் – மாநகராட்சி பள்ளிகளுக்கு நிதியிழப்பினை ஈடுசெய்து – ஆணை வெளியிடப்படுகிறது

---

**பள்ளிக் கல்வித் (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். 134 நாள் : 12.5.2010.

திருவள்ளுவராண்டு 2041 சித்திரை 29

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.110, பள்ளிக் கல்வி, நாள் 29.05.2008.
2. அரசாணை (நிலை) எண்.216,பள்ளிக் கல்வி, நாள் 8.11.2008.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 28547/ஜி2/இ3/09, நாள் 5.1.2010.

* * * * * * * *

**ஆணை:–**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் கல்வி பயிலும் மாணவ/ மாணவியர்களிடம் வசூலிக்கப்பட்டு வந்த சிறப்புக் கட்டணம் இரத்து செய்யப்பட்டதால் ஏற்பட்ட நிதி இழப்பினை, 2008–2009–ஆம் கல்வியாண்டுக்கு ஈடுசெய்ய, மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி ரூ.21.40 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு மாவட்ட வாரியாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

2. மேற்காண் அரசாணைகளில் மாநகராட்சி பள்ளிகளுக்கு சிறப்புக் கட்டண நிதி இழப்பீட்டினை ஈடுசெய்வது குறித்து அறிவுரைகள் வழங்கப்படாமையால் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அனுமதித்து வழங்கப்படவில்லை என்றும், எனவே மீதமுள்ள தொகை அரசுக்கு சரண் செய்யப்பட்டது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், சென்னை, மற்றும் மதுரை மாநகராட்சி ஆணையர்கள் சிறப்புக் கட்டண இழப்பீட்டுத் தொகை மாநகராட்சி பள்ளிகளுக்கு ஈடு செய்யப்படாததால், அத்தியாவசிய செலவினங்களுக்கு அப்பள்ளிகள் நிதியின்றி சிரமப்படுவதாக குறிப்பிட்டுள்ளதாகவும், எனவே சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பொருட்டு பின்வருமாறு சிறப்புக்கட்டண ஈட்டுத்தொகை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

| | |
|---|---|
| சென்னை மாநகராட்சி | ரூ.26,24,836/- |
| மதுரை மாநகராட்சி | ரூ. 8,21,711/- |
| மொத்தம் | ரூ.34,46,547/- |

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, 2008-2009-ஆம் கல்வி ஆண்டு முதல் சிறப்பு கட்டணம் இரத்து செய்ததினால் ஏற்பட்ட நிதி இழப்பீட்டினை சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி பள்ளிகளுக்கும் ஈடுசெய்வதற்காக ரூ.34,46,547-னை (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து ஐநூற்று நாற்பத்து ஏழு மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கோரிக்கை எண்.43-03-ன்கீழ் துவக்கப்படும் கீழ்க் காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுகல்வி - 02 இடைநிலைக் கல்வி - 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்-I. திட்டத்தில் சேராதது - BB - நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் சிறப்புக் கல்விக் கட்டணத்தை நீக்கியதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்தல் - பள்ளி கல்வி இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை - 51. இழப்பீடு -02 ஏனைய இழப்பீடுகள் (த.தொ.கு. 2202-02-109-BB-5128)"

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இச்செலவினம் "புதுப்பணித்திட்டமாக" கருதப்படும். துணை மதிப்பீடுகளில் மேற்காணும் செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ-I) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாரச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதித் (வ.செ.தி.பொ-I) துறைக்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினம் 2010-2011-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திடும் பொருட்டு தக்க விளக்கக் குறிப்பினை உரிய தருணத்தில் அரசின் நிதித்துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 20126/கல்வி-II/10, நாள் 10.5.2010-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 117 (நூற்றுப் பதினேழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை-5.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-108.
ஆணையர், ஊரக வளர்ச்சி, சென்னை-15.
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை-3
மதுரை மாநகராட்சி ஆணையர், மதுரை
மாநில கணக்காயர், சென்னை-18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/18/35/79.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).

நகல்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு I & II) துறை, சென்னை-9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (வரவு-செலவு/எல்.) துறை, சென்னை-9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.